**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.22**
**Defence**
**Court**

**Name : மொகைதீன்பிச்சை**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.12.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தற்போது தென்காசியில் பாறையடி தெருவில் குடியிருக்கிறேன். நான் தென்காசியில் தெப்பக்குளம் எதிரில் சைக்கிள் கடை வைத்திருக்கிறேன். அ.சா.ஆ.21 எனது சகலை, அவரது மனைவியின் தங்கை எனது மனைவியாவார். இறந்துபோன நாகூர்மீரான் என் மனைவியின் தம்பி ஆவார். குமார் பாண்டியன் என்பவர் கொலைசெய்யப்பட்டு இறந்துபோனார்.

என்ன காரணத்திற்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது. நான் த.மு.மு.க கட்சியில் உறுப்பினராக இல்லை. அலாவுதீனை தெரியாது. வழக்கு சம்பந்தமாக அலாவுதீன் கொடுத்த புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் போலீசாரிடம் என் மைத்துநர் நாகூர் மீரானை அடையாளம் காட்டவும் இல்லை. அபுஅயூப் அன்சாரி, சைய்யது அலி , பசுலுதீன், மொசாக் என்ற முகமது இஸ்மாயில் , பசீர் , ஆகியோரை தெரியாது. 2007 ம் வருடம் பசீர் , அசன்கனி , நாகூர் மீரான் ஆகியோர்கள் இறந்துபோனார்கள். மதக்கலவரத்தால் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன்.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் போலீசார் விசாரித்தபோது எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் தென்காசி அம்மன் சன்னதி தொழுகை பள்ளி வாசலை புதிதாக எடுத்து கட்ட நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது தென்காசி இந்து முன்னனி தலைவர் குமார் பாண்டியன் அதற்கு தடையாக இருந்து வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக 2006 ம் ஆண்டு டிசம்பர் 6 ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தை நாங்கள் கருப்பு தினமாக அனுசரித்தபோது இந்து முன்னனி தலைவர் குமார்பாண்டியன் இந்து எழுச்சி நாளாக அறிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியதாகவும் அதனால் அதற்கு நடவடிக்கை எடுக்க பள்ளிவாசலை சேர்ந்த நபர்களும் நாங்களும் ஆலோசனை செய்தோம் என்றும் அதன் தொடர்ச்சியாக 17.12.2006 ம் தேதி குமார் பாண்டியனை எங்களது தரப்பை சேர்ந்த ஹனிபா, அப்துல்லா, செய்யது சுலைமான்சேட் கொலை செய்தனர் என்றும் அவ்வாறு கொலை

செய்ததற்கு பழியாக இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் தமுமுக தலைவர் மைதீன் சேட்கானை வெட்டி கொலை செய்ய முயற்சித்து வந்தனர் என்றும் இந்நிலையில் ஹனிபாவும், அப்துல்லாவும் பிணையில் வெளிவந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பம் இட சென்றபோது அவர்களுக்கு பாதுகாப்பாக ஆட்டோவில் சிலர் சென்று வருவார்கள் என்றும் போலீசார் விசாரனையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007 தேதி காலை 10.15 மணிக்கு நான் எல்ஆர்எஸ்பாளையம் கூலக்கடை பஜார் என்.டி.எஸ்,.என் பலசரக்கு கடையில் சாமான் வாங்கி விட்டு வெளியே வந்தபோது முருகேசன் என்ற அப்துல்லாவும், நாகூர்ஹனிபாவும் நிபந்தனை கையொப்பம் போட்டுவிட்டு இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோக்களில் திரும்ப வந்துகொண்டிருந்த போது கலவரம் ஏற்பட்டு அதில் பாதுகாப்புக்காக சென்றிருநத என் மைத்துநர் நாகூர்மீரான் என்பவரும் வெட்டுப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்துபோனார் என்று கேள்விப்பட்டதாக மருத்துவமனைக்கு சென்று நான் பார்த்தபோது அங்கு வந்திருந்த சிவந்திபட்டி ஆய்வாளர் முன்னிலையில் என் மைத்துனர் சடத்தினை நான் அடையாளம் காட்டினேன் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தினருக்கும், எதிரிகளுக்கும் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி எங்கள் சமுதாயத்தினர் அந்த வழக்கில் இருந்து தப்பிக்கவும் எதிரிகள் மீதான வழக்கில் இருந்து அவர்கள் தப்பிக்கவும் போலீசார் விசாரணையின் போது கூறிய விபரங்களை மறைத்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>